सत्यमेव जयते

# இந்தியத் துணைத்தூதரகம்

**யாழ்ப்பாணம்**

## ஊடக அறிக்கை

### *காந்தி ஜெயந்தியும் சர்வதேச அகிம்சை தினமும்*

### *ஒக்டோபர் 2, 2017*

*யாழ். இந்தியத் துணைத் தூதரகமானது அகில இலங்கை காந்தி சேவா சங்கத்தினருடன் இணைந்து காந்தி ஜெயந்தியையும் சர்வதேச அகிம்சை தினத்தையும் முன்னிட்டு சிறப்புப் பட்டிமன்ற நிகழ்வினை ஒக்டோபர் 2ம் திகதி திங்கட்கிழமை மாலை 5.00 மணிக்கு யாழ்ப்பாணம் வீரசிங்கம் மண்டபத்தில் ஏற்பாடு செய்துள்ளது.*

*தமிழ்நாட்டைச் சேர்ந்த பேராசிரியர் கலாநிதி கு ஞானசம்பந்தன் அவர்களின் தலைமையில் யாழ்ப்பாணத்தின் முன்னணிப் பேச்சாளர்களான பேராசிரியர் T வேல்நம்பி, திரு S லலீசன், திரு N விஜயசுந்தரம், திரு R சர்வேஸ்வரா, செல்வி பிரியா வின்சன் பீரிஸ், செல்வி K தயாளினி ஆகியோர் பங்குபற்றுகின்றனர்.*

*மகாத்மா காந்தியின் பிறந்ததினத்தை நினைவுகோரும் முகமாக ஒவ்வொரு வருடமும் ஒக்டோபர் 2ம் திகதி காந்தி ஜெயந்தி கொண்டாடப்பட்டு வருகின்றது. மேலும் இந்தியாவில் மட்டுமல்ல ஐக்கிய நாடுகள் சபையிலும் காந்தி ஜெயந்தியை சர்வதேச அகிம்சை தினமாகப் பிரகடனப்படுத்தி வருடம்தோறும் கொண்டாடி வருகின்றமை குறிப்பிடத்தக்கது*

***27 செப்ரெம்பர், 2017***